**கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 05 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூலை 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 3,719,075 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) 2013 ஆண்டின் போது மேல் மாகாண சபையில் இருந்து சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டியின் பெறுமதியினை மூலதப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 2,140,900 தொகையினை கணக்கீடு செய்யும் போது ரூபா 74,365,309 தொகை என காட்டியிருந்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 72,224,409 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த 07 மோட்டார் வாகனங்கள் ரூபா 37,473,920 தொகையினை மூலதனப் படுத்தியிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பொதுக் களஞ்சியம் மற்றும் மின்சார களஞ்சியம் ஆகியவற்றிற்காக கடன் அடிப்படையில் பண்டங்கள் கொள்வனவு செய்தல் முறையே ரூபா 57,086,904 தொகை மற்றும் ரூபா 4,706,140 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்ததன் காரணமாக அக் கணக்கு ரூபா 61,793,044 தொகையினால் அதிகரித்து காட்டப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டிற்காக மாகாண சபையில் இருந்து மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தில் இருந்து பெற வேண்டிய நிதி உதவி ரூபா 26,939,142 தொகை எனினும், அவை ரூபா 27,494,857 தொகை என கணக்கீடு

செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 555,715 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) வீதவரிக்காக வழங்கப்பட்ட கழிவு ரூபா 1,366,073 தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2015 ஆண்டின் போது 2014 ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த வருமான உதவியின் கூட்டுத்தொகை ரூபா 8,728,222 தொகையெனினும் அதனை ரூபா 3,622,315 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 5,105,907 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) 2015 வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 44,095,145 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஒதுக்கம், பலவினக் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு மாத்திரம் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமையால் மின்சாரக் கடன்கொடுத்தோர் ரூபா 2,298,407 தொகையினாலும் பொது வழங்கள் கடன்கொடுத்தோர் ரூபா 41,796,738 இனாலும் குறைவாக செலவு வைக்கப்பட்டுள்ளது.

(ஓ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 45,529,453 தொகை எனினும் கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 44,095,145 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,434,308 இனால் கடன்கொடுத்தோர் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) 2010 ஆண்டு முதல் நகர அபிவிருத்தி அதிகார சபை வைப்புக்கள் என பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,257,302 இற்கான தொகை நகர அபிவிருத்தி அதிகார சபை வைப்பு முதலீட்டுக் கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,992,433 தொகை உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன்மீதி கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ங) பிணை வைப்புக்கள் சேமிப்புக் கணக்கின் வட்டியாகிய ரூபா 6,323 தொகை ஊழியர் பிணைக் கணக்கிற்கு மற்றும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

(ச) 2015 திசெம்பர் 31 திகதி வரை சபைக்கு உள்ளூராட்சி அமைச்சில் இருந்து மற்றும் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபையில் இருந்து நன்கொடையாகக் கிடைத்திருந்த 04 வாகனங்களின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஞ) சபையின் அனைத்து பெறுவனவுகள் கொடுப்பனவுகளை பொழிப்பு காசேட்டில் பதிவு செய்து சமப்படுத்தியிருக்காதுடன் உப அலுவலகத்தில் இருந்து நேரடியாக தலைமை அலுவலகத்தின் வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டு பெற்றுக் கொள்ளும் பணம் பொழிப்பு காசேட்டில் பதிவு செய்திருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்களின் மீதிகள் கணக்குகளின் பிரகாரம் மற்றும் துணைப் பதிவேடுகள்/ பட்டியல்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 111,198,049 இற்கான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

முன்னைய ஆண்டுகளுக்காக கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த ரூபா 714,014 தொகைக்கான கணக்கு மீதிகள் பல வருட காலமாக தீர்க்கப்படாமல் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(i) கூட்டுத்தொகை ரூபா 282,981,606 இற்கான 14 கணக்கு விடயங்கள் தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் காணப்படாமையினால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ii) நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,177,568 இற்கான வழமையல்லாத வரவு மீதியொன்று மற்றும் ரூபா 190,889 இற்கான வழமை இல்லாத செலவு மீதியொன்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 109,999,705 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 78,435,100 தொகையாகும்.

### 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலக்கம் 098-01-002-3-3913965 கொண்ட கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத ரூபா 8,667 தொகைக்கான 03 காசோலைகள் இருந்தன.

(ஆ) பல வருட காலம் முதல் காணப்படும் ரூபா 73,528 தொகைக்கான கூட்டுதல்கள் மற்றும் ரூபா 20,578,530 தொகையான கழித்தல்கள் மீதிகளை உறுதிப்படுத்தப்படாமல் வங்கி இணக்கக் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் போது 03 வங்கிக் கணக்குகள் தொடர்பாக வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 222,201 பெறுமதியான 23 காசோலைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 396(ஈ) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக தலைவர் சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி | சிட்டை இடப்பட்டவை | உள்ளவாறான அறவீடுகள் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீத வரி | 81,035,995 | 69,769,866 | 71,574,400 | 75,979,925 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 485,430 | 617,860 | 626,960 | 476,330 |
| வாடகை | 7,119,965 | 9,330,600 | 6,177,252 | 10,273,310 |
| வர்த்தக வரி | 231,080 | 1,065,581 | 1,177,811 | 118,850 |

### 2.3.2 வீத வரி

2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலவீச்சல் அறவிடப்பட வேண்டிய வீதவரி மீதி ரூபா 35,240,812 முதல் ரூபா 69,968,038 வரை அதிகரித்திருந்தது.

### 2.3.3 கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 178 கடைகளின் சட்டரீதியான உரிமை சபைக்கு சொந்தமானவை என உறுதிப்படுத்துவதற்காக காணி உறுதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 17 கடைகளை துணை வாடகை கொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வாடகையாளர்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து கேள்விகோரப்படாமல் 1980 திசெம்பர் 31 திகதியில் உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 கொண்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக அக் கடைகள் துணை வாடகையாளருக்கு அதாவது தற்போது அனுபவிக்கும் நபருக்கே ஒப்படைப்பதற்காக சபை தீர்மானித்திருந்தது.

(இ) பல வருட காலமாக ரூபா 1,335,813 இற்கான கடை வாடகை செலுத்தப்படாமல் இருந்த கடைகளின் வாடகையாளர் 30 பேர் தொடர்பாக சபையினால் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2015 ஆண்டிற்கான இறைச்சி மற்றும் மீன் விற்பனை 05 கடைகள் வாடகைக்குக் கொடுத்திருக்காமையால் சபை இழந்துள்ள வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பாக சுமார் ரூபா 170,500 தொகையாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு
-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை
----------------------------------------------

3.1.1 இயந்திர வாடகை செலுத்துதல்
-------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சேதனப் பசளை தளத்தில் குப்பைகள் தள்ளுவதற்காக வாடகை அடிப்படையில் சேன்டோஸர் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,227,570 இற்கான பில்பத்திரங்கள் செலுத்தப்பட்டிருந்தது. சபை மற்றும் சேவை வழங்குனர் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இயந்திரம் அல்லது பகுதியொன்று செயற்படாதுவிடில் கூடிய விரைவில் பழுதுபார்த்தல் வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் நாளாந்த விவகாரங்களுக்கு அதே தரத்தையுடைய கெடபில்லர் இந்திரமொன்று வழங்குவது சேவை வழங்குனரினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் வழங்கியிருந்த இயந்திரம் அடிக்கடி செயலிழந்து காணப்பட்டது.

(ஆ) இயலளவு கூடுதலாக உள்ள இயந்திரம் ஒன்றின் மூலம் குறைந்த இயந்திர மணித்தியாலங்கள் சேவையைப் பெற்றுக்கொள்ளல் கிரயத்தை குறைத்தல் என்ற குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என சமர்ப்பிக்கப்பட்டுள்ள பில்பத்திரங்கள் அதிகரிக்கப்படுவதுடன் இது வரை சபையினால் செலுத்தியிருந்த மற்றும் செலுத்த வேண்டியிருந்த மொத்த பில்களின் பெறுமதி ரூபா 12,974,620 தொகை என்பதினால் புதிதாக சேன்டோஸர் ஒன்று கொள்வனவு செய்தல் மிகவும் இலாபகரமானது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை
-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஜூன் 30 திகதி 03 முச்சக்கர வண்டிகள் ரூபா 1,637,250 தொகைக்கு கொள்வனவு செய்திருந்ததுடன் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லையை மிகைத்து 03 முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 137,250 இற்கான மேலதிக செலவொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. முதலாம் கூறுவிலையின் பிரகாரம் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படாமையால் ஒட்டுமொத்த கொடுக்கல் வாங்கல்களில் ரூபா 117,120 தொகையொன்று சபை நிதியத்திற்கு நட்டமேற்பட்டுள்ளது.

(ஆ) சபையின் வாகனப் பதிவேடு நாளது வரை ஆக்கப்படாமையால் 2003 வருடத்திற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 11,779,199 தொகைக்கான வாகனங்கள் தொடர்பாக அட்டவணை மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் நகர அபிவிருத்தி அதிகார சபை வங்கிக் கணக்கில் ரூபா 1,950,704 தொகை சபைக்கு தேவையான செயற்திட்டங்களை செயற்படுத்தாமல் பல வருட காலம் முதல் செயற்படாது காணப்பட்டது.

(ஈ) தொடர்ச்சியாக காணப்படும் தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 3,715,414 தொகையாகும்.

(உ) கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்ட பற்றாக்குறை மற்றும் மிகைகள் தொடர்பாக வழங்கியிருந்த விதப்புரைகளின் பிரகாரம் இலங்கை குடியரசின் நிதிப்

பிரமாணங்கள் 757 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தினரால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான 135 ஆதனங்களுக்கான காணி உறுதிகள் அல்லது சாட்டுதல் கட்டளைகள் பெற்றிருக்கவில்லை.

(எ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 8 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்மீதி ரூபா 869,135 தொகையும், சேவையை விட்டுச் சென்றுள்ள 3 ஊழியர்களின் கடன் மீதி ரூபா 44,800 தொகையும் சேவை இடைநிறுத்தப்பட்ட 3 ஊழியர்களின் கடன் மீதி ரூபா 408,120 தொகையுமாகும்.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

மாகாண சபைகள், மாகாண குறிப்பிட்ட மற்றும் 100 நாட்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 38 செயற்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் மாகாண குறிப்பிட்டவற்றின் கீழ் கிடைத்திருந்த ஒரு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் 100 நாட்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 06 செயற்திட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் மற்றும் நல்லாளுகையும்

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியசரின் நிதிப் பிரமாணங்கள் 134(1),(2) மற்றும் (3) இனால் காட்டப்பட்டுள்ளவாறு உள்ளக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கத்துடன் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் சபை குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கி செயற்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 ஜுன் 03 திகதிய PED/12 கொண்ட பொதுநிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிலே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்